**செய்தி வெளியீடு எண்: 15** **நாள்: 10.01.2013**

<u>செய்தி வெளியீடு</u>

தமிழகத்தில் வாழும் அனைத்து மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் தேவையான அளவு வழங்கப்பட வேண்டும் என்பதே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசின் நோக்கமாகும்.

அதன் அடிப்படையில், தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி, கயத்தாறு, ஒட்டப்பிடாரம், விளாத்திக்குளம், மற்றும் புதூர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 248 ஊரகக் குடியிருப்புகளில் வசிக்கும் மக்களுக்கு குடிநீர் வசதி செய்து கொடுப்பதற்காக சீவலப்பேரி அருகே தாமிரபரணி ஆற்றினை நீர் ஆதாரமாகக் கொண்டு , 94 கோடியே 4 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்துவதற்கும், இத்திட்டத்திற்காக வருடாந்திர பராமரிப்பு செலவாக 1 கோடியே 62 லட்சம் ரூபாய் வழங்குவதற்கும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணையிட்டுள்ளார்கள்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் விராலிமலை, அன்னவாசல், பொன்னமராவதி, திருமயம், அரிமளம், குன்னாண்டார்கோயில் மற்றும் புதுக்கோட்டை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 1,766 ஊரகக் குடியிருப்புகளில் வசிக்கும் மக்களின் குடிநீர் தேவையை நிறைவேற்றுவதற்காகவும், சிவகங்கை மாவட்டத்தில் எஸ் புதூர் மற்றும் சாக்கோட்டை ஒன்றியங்களைச் சார்ந்த 125 ஊரகக் குடியிருப்புகளில் வசிக்கும் மக்களின் குடிநீர் தேவையை நிறைவேற்றுவதற்காகவும், திருப்பாய்துறை அருகில் காவிரி ஆற்றினை நீர் ஆதாரமாகக் கொண்டு 301 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்துவதற்கும், வருடாந்திர பராமரிப்பிற்காக 10 கோடியே 86 லட்சம் ரூபாய் நிதி வழங்குவதற்கும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதேபோன்று, திருப்பூர் மாவட்டம், குடிமங்கலம் மற்றும் உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 158 ஊரகக் குடியிருப்புகளில் வசிக்கும் மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக, திருமூர்த்தி அணையினை ஆதாரமாகக் கொண்டு 54 கோடியே 14 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்துவதற்கும், வருடாந்திர பராமரிப்புக்காக 1.20 கோடி ரூபாய் நிதி வழங்குவதற்கும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அரசின் இந்த நடவடிக்கைகள் மூலம், இப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் தொடர்ந்து கிடைத்திட வழிவகை ஏற்படும்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை,சென்னை-9.
நாள்:- 10.1.2013.